**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**E.A.No.8/2025**

**in**

**E.A.No.2/2023 in E.P.No.11/2020 in RCOP No.4/2007**

பாலமுருகன் ....மனுதாரர்/தகதா மனுதாரர்

/எதிர்/

1. குருசாமி (இறப்பு)
2. ஈஸ்வரி
3. கருப்பாயி
4. சக்கம்மாள்
5. வெயிலுகந்தம்மாள் ....1 முதல் 5 மனுதார்கள்/மனுதாரர்கள்
6. அந்தோணிராஜ் ....6 ம் எதிர்மனுதார்/எதிர்மனுதாரர்

இம்மனுவானது 15.07.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.பன்னீர்செல்வம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 6ம் எதிர்மனுதாரர்கள் I.A.No.2/2023 மனுவில் ஒருதலைபட்சமாகியுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் ஒருதலைபட்சமாக கருதப்பட்டும், மனு, 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் மற்றும் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.19 17:21:18 +0530

**<u>உத்தரவு</u>**

மனுதாரரால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறை விதி 76–ன் கீழ், தகதாமனுவில் கண்ட சொத்திற்கான சொத்துவரி கேட்பு பதிவேட்டு நகலை சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைத்து மனுதாரர் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–</u>**

தகதாமனுவின் தபசிலாகக் காட்டப்பட்டுள்ள சொத்தைப் பொறுத்து மேற்படி மாரித்தாய் என்பவர் சுப்புலட்சுமியிடமிருந்து சரியான பிரதிபிரயோஜனத்தின் பேரில் கடந்த 20.01.2001 தேதிய பதிவுக்கிரைய ஆவணம்மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றும், அதன்பின்னீடு மேற்படி சொத்தில் அப்போதைய சந்தை மதிப்பில் ரூ.2,00,000/– வரை செலவு செய்து வீடு கட்டி மேற்படி வீட்டிற்கு தனது தாயாரான சுப்புலட்சுமி பெயரில் கதவு எண்.52 ஏ– என சங்கரன்கோவில் நகராட்சியில் சொத்துவரி விதிப்பு ஏற்பட்டு மேற்படியாரே நெடுகிலும் சொத்துவரி முதலானது செலுத்தி சர்வசுதந்திரமாக ஆண்டு அனுபவம் செய்துவந்தார் என்றும், அப்பால் மேற்படி சுப்புலட்சுமி இதன் தபசில் சொத்தை அவரின் கணவரான சண்முகையா என்பவருக்கு 06.06.2012 தேதிய பதிவு ஏற்பாடு ஆவணமூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றும், மேற்படி ஆவணகாலமுதல் மேற்படியாரே தகதாமனுவில் கண்ட சொத்தை சர்வசுதந்திரமாக ஆண்டு அனுபவம் செய்துவந்தார் என்றும், அப்பால் மேற்படி சண்முகையா என்பவரும் இதன் தபசில் சொத்தைப்பொறுத்து தனது பெயருக்கு 29.06.2016 தேதிய பதிவு ஏற்பாடு ஆவணத்தை பிறப்பித்து வைத்திருந்தார் என்றும், மனுதாரர் மேற்படி ஆவணத்தை ஒப்புக்கொண்டு மேற்படி ஆவணகாலமுதல் யாவரும் அறிய வெளிப்படையாக நிராட்சபணையின்றி சர்வசுதந்திரமாக ஆண்டு அனுபவம் செய்துவருவதாகவும், இதன் தபசில் சொத்தைப் பொறுத்து தனது தாயாரான சுப்புலட்சுமி பெயரில் சொத்துவரி விதிப்பு மேற்படியாரால் சொத்துவரியும் செலுத்தப்பட்டு வரப்பட்டது என்றும், அதை நிரூபணம் செய்யும் வகையில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.19 17:21:26 +0530

தகாதமனு தபசில் சொத்தை பொறுத்து சங்கரன்கோவில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டுவரும் சொத்துவரி கேட்பு பதிவேட்டு நகலுக்கான சான்றிட்ட நகல் கோரி கடந்த 24.06.2024 தேதியில் விண்ணப்பம் அளித்திருந்ததாகவும், ஆனால் தான் அளித்த விண்ணப்பத்தின்பேரில் மேற்படி சொத்திற்கான சொத்துவரி கேட்பு பதிவேட்டு நகலை தனக்கு வழங்க இயலாது என்றும் இந்நீதிமன்றம் சமர்பிக்க உத்தரவிடும்பட்சத்தில் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துவிட்டார்கள் என்றும், ஆகையால், தகதாமனுவில் கண்ட சொத்திற்கான சொத்துவரி கேட்பு பதிவேட்டு நகலை சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைத்து மனுதாரர் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>2 முதல் 5 எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**:-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், இந்த நிறைவேறுதல் மனு நடவடிக்கை தெரியவந்ததும் மனுதாரர் வீட்டுவரி மற்றும் சங்கரன்கோவில் நகராட்சியில் சொத்துவரி விதிப்பு ஏற்பட்டு தகதாமனுவில் கண்ட சொத்திற்கான சொத்துவரி கேட்பு பதிவேடு நகலை கேட்டதாகவும், அதனை சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்திலிருந்து தர மறுத்ததாகவும் கூறியுள்ள சங்கதிகள் ஒரு கட்டுக்கதை என்றும், உண்மையில் இந்த மனுதாரர் சொத்துவரி செலுத்தியிருந்தால் அதன் ரசீதுகள் இந்த மனுதாரர் கைவசமே இருக்கும் என்றும், இந்த மனுதாரர் சொத்துவரி செலுத்தி வருகிறார் என்பதனை காட்டுவதற்காக அந்த சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள சொத்துவரி கேட்பு பதிவேடு நகலை இந்நீதிமன்றத்திற்கு கொண்டு வரவேண்டிய அவசியமில்லை என்றும், ஏனெனில், ஒருவர் பெயரில் சொத்துவரி விதிப்பு ஏற்பட்டால் மட்டுமே தலைப்புரிமை ஏற்படக்கூடியதில்லை என்றும், இந்த மனுதாரர் தனது சொத்து என விளம்புகை செய்ய தாக்கல் செய்துள்ள மனுவில் அவரது கைவசம் உள்ள அசல் ரசீதுகளை கொண்டுவராமல் மோசடியாக

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.19 17:21:36 +0530

சொத்துவரி கேட்பு பதிவேட்டினை கொண்டுவர முயற்சிக்கிறார் என்றும், அது மோசடியானது என்றும், இந்த மனுதாரர் கோரும் ஆவணமானது ஒரு பொது ஆவணமாக உள்ளதால், அதன் நகல் பெறுவது எளிதாகும் என்றும், அவ்வாறு சொத்துவரி கேட்பு பதிவேட்டின் நகலைப் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணடிக்க இந்த வம்பு மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், நிறைவேறுதல் மனு தாக்கல் செய்த காலத்திலிருந்து நிறைவேறுதல் மனு நடவடிக்கை விபரத்தினை அறிந்துகொண்டே, வாழ்விப்பு எடுக்க சென்றபோது அதனை நிறுத்திடும் வகையில் கோரிக்கை மனு தாக்கல் செய்து காலதாமதம் செய்துவருகிறார் என்றும், இந்த மனுதாரர் எவ்வித நியாயமான காரணமுமின்றி நிறைவேறுதல் மனுவை இழுத்தடிப்பதற்காக தாக்கல் செய்த இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது, தகதாமனுவில் கண்ட சொத்திற்கான சொத்துவரி கேட்பு பதிவேட்டு நகலை சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைத்து மனுதாரர் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுவின் மனுதாரரால் E.A.No.2/2023 மனுவானது தகதா மனுவின் சொத்தை 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றம் மூலம் வாழ்விப்பு சுவாதீனம் பெற்றுக்கொள்ள உரிமை இல்லை என உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.19 17:21:48 +0530

மனுவானது கூடுதல் மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனு இந்நீதிமன்றத்தில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மேலும், மனுதாரர் சங்கரன்கோவில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டுவரும் சொத்துவரி கேட்பு பதிவேட்டு நகலுக்கான சான்றிட்ட நகல் கோரி கடந்த 24.06.2024 தேதியில் அளித்த விண்ணப்பத்தையும், இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ளார். இதிலிருந்து, மனுதாரர் சங்கரன்கோவில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டுவரும் சொத்துவரி கேட்பு பதிவேட்டு நகலுக்கான சான்றிட்ட நகலை பெற உரிய முயற்சி மேற்கொண்டுள்ளார் என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

8) இந்நிலையில், மனுதாரர் தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய தகதாமனுவில் கண்ட சொத்திற்கான சொத்துவரி கேட்பு பதிவேட்டு நகலை சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்க வேண்டியது அவசியமானதாகும்.

9) மேலும், மனுதாரர் தனது வழக்கை நிரூபிக்க போதுமான வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டவிதி என்பதாலும், மேலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படபோவதில்லை என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.19 17:21:59 +0530

**11) இறுதியாக**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.19 17:22:08 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**

– இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.19 17:22:17 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
E.A.No.8/2025 in
E.A.No.2/2023 in
E.P.No.11/2020 in
RCOP No.4/2007
உத்தரவு (Draft / Fair)

நாள் : 19.09.2025